28-03-2013 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

## தலைப்பு : தேசம் - இனம் - தேசிய இனம்

தொடக்கவுரையாடல் : சி. சிவசேகரம்

தேசம் என்ற சொல்லுக்கு ஸ்ற்றாலின் முன்வைத்த நேர்த்தியானதும் முழுமையானதுமான வரைவிலக்கணம், இன்றுங்கூடச், சமகாலத் தேசம் என்பதற்குச் செல்லுபடியானதும் பொருத்தமானதுமான ஒரு விவரணமாகவே உள்ளது: "தேசம் என்பது, பெதுவான மொழி, பிரதேசம், பொருளியல் வாழ்வு, பொதுவான பண்பாடொன்றாகப் பரிணமிக்கும் உளவியற் தன்மை என்பனவற்றின் அடிப்படையில், வரலாற்றின் வடிவுபெற்ற ஒரு உறுதிப்பாடான மக்கள் சமூகமாகும்".

ரஷ்யப் பேரரசை மாற்றியமைப்பதற்கான புரட்சிகரப் போராட்டம் ஒன்றின் போக்கில், தேசிய ஒடுக்குதலையும் தேசங்களின் சுயநிர்ணய உரிமையையும் கையாளுவது தொடர்பாக, இவ் வரைவிலக்கணம் முன்வைக்கப்பட்டது. ஒரு தேசத்தை நடைமுறைச் சாத்தியமாக்குவது எது என்ற கூர்ந்த கவனிப்பினதும் ஆழ்ந்த விளக்கத்தினதும் அடிப்படையில் அது அமைந்திருந்தது. ஸ்ற்றாலின் வரைவிலக்கணம் தேசத்திற்கான அத்தியாவசியமான பண்புகள் எனக் கூறுவன, ஒரு தேசத்தை நடைமுறைச் சாத்தியமாக்கத் தேவையானவையாக இன்னமும் பரவலாக ஏற்கப்படுகின்றன. மதம் —தென்னாசியாவிற் சாதி— போன்ற காரணிகள் சமூகக் குழுமங்களின் அடையாளங்களை வரையறுத்துள்ளதுடன் தேசிய இயக்கங்களிலும் தேசிய அடையாளத்தின் உருவாக்கத்திலும் பெரும் பங்காற்றியுள்ள போதும், அவை தேசத்தை வரையறுக்குங் காரணிகளல்ல. இனத்துவத்தின் வரைவிலக்கணங்கள் இனத்துவத்தைத் தேசியத்திற்கு வெளியே —சில சமயம் தேசியத்திற்குச் சமமாக— வைக்கின்றன. எனினும், அரசியலில், தேசம் என்ற கருத்தாக்கம் பிற அடையாளங்களை விட வலிமையுடையதாகவே இருந்து வந்துள்ளது.

தேசிய இனம் என்ற பதம், பொதுவாக, ஒரு தேசத்துக்குரிய அத்தியாவசியமான பண்புகளைப் பெருமளவும் உடையனவாயும் —ஏற்கெனவே ஒரு தேசமாக இல்லாதவிடத்து— அவ்வாறு அமைவதற் கான ஆற்றலைக் கொண்டும் உள்ள சமூகங்களைக் குறிக்கப் பயன் படும். பல்லின அல்லது பல் தேசிய இனத் தேச-அரசுக் கட்டமைப்பு ஒன்றினுள் பிற தேசிய இனங்களுடன் ஒரு தேசிய இனத்தின் உடன்வாழ்வு பிரச்சனைக்குட்படும் போது, அத் தேசிய இனம் தன்னை ஒரு தேசமாக அறிவித்துத் தன்னை ஒரு தேச அரசாக நிறுவ முனையும் தேவை ஏற்படுகிறது.

> தேசிய இனம் என்ற பதம், பொதுவாக, ஒரு தேசத்துக்குரிய அத்தியாவசியமான பண்புகளைப் பெருமளவும் உடையனவாயும் —ஏற்கெனவே ஒரு தேசமாக இல்லாதவிடத்து— அவ்வாறு அமைவதற் கான ஆற்றலைக் கொண்டும் உள்ள சமூகங்களைக் குறிக்கப் பயன் படும். பல்லின அல்லது பல் தேசிய இனத் தேச-அரசுக் கட்டமைப்பு ஒன்றினுள் பிற தேசிய இனங்களுடன் ஒரு தேசிய இனத்தின் உடன்வாழ்வு பிரச்சனைக்குட்படும் போது, அத் தேசிய இனம் தன்னை ஒரு தேசமாக அறிவித்துத் தன்னை ஒரு தேச அரசாக நிறுவ முனையும் தேவை ஏற்படுகிறது.

தேச-அரசு என்ற கருத்தாக்கத்தின் விருத்தி, முதலாளியத்தின் விருத்தியுடன் நெருங்கிப் பிணைந்துள்ளது. எனவே, முதலாளியம் ஏகாதிபத்தியமாக மாற்றமடைவதை அடுத்துப், பன்னாட்டு மூலதனம் தேச எல்லைகளைத் தாண்டிய நிலையில், ஏகாதிபத்தியம் தனது உலகமயமாதற் செய்நிரலூடு உலக ஆதிக்கத்தை வேண்டுகையில், முதலாளியததுக்குத் தன் தாயகத்திற் தேசியத்தக்கான தேவை இல்லாது போகிறது. முன்னேறிய முதலாளிய நாடுகளில் தேசியம் முதலாளிய நல்ன்கட்கு மாறாகச் செயற்படலாம். இவ்வாறு, மூலதனம் சர்வதேசப் பண்பைப் பெற்றதையடுத்துத், தேச-அரசு என்பது மூலதனத்துக்குப் பயன் குறைந்ததாகிவிட்டது. நவதாராளவாதிகளும் ஏகாதிபத்திய உலகமயமாக்கலின் ஆதரவாளர்களும் தேசியத்தை நிராகரிப்பதற்கு இது முக்கியமான ஒரு காரணமாக இருக்கலாம்.

முற்போக்கான வரலாற்றாசிரியரான ஹொப்ஸ்பாம், வேறு காரணங்கட்காகத் தேசியம் பற்றிப் பாதகமான நோக்குடையவராக உள்ளளார். தேசம் என்பதற்கு சர்வவியாபகமான தேவை என ஒன்றுமே தேவையில்லை எனவும் "தம்மைத் தேசமாகக் கருதுகிற, போதியளவு பெரிய எந்த மக்கள்திரளும் அவ்வாறே நடத்தப்படும்". அன்டர்ஸன் அதற்கும் அப்பாற் சென்று, ஆளையாள் நேரிற் காணக்கூடிய ஆதிநிலைக் கிராமச் சமூகங்களினும் பெரிதான எச் சமூகமும், —உள்ளார வரையறுக்கப்பட்டதாகவும் இறைமை உடைய தாகவும்— கற்பனை செய்யப்பட்ட சமூகமே என்கிறார். எனினும் அவர் தேசங்களதும் தேசியத்தினதும் அரசியல் முக்கியத்துவத்தையோ அவற்றின் இருப்பிற்கான உரிமையையோ மறுக்கவில்லை.

மிகுதி அடுத்த பக்கம்


## அடுத்து வரும் தலைப்புக்கள்

பகுத்தறிவு : கோவூர் நினைவு உரையாடல்

இருமொழி உரையாடல் | 04-04-2013

மாற்று அரசியல் கணினி விளையாட்டுக்கள்

மு. மயூரன் | 11-04-2013



மார்ட்டின் லூதர் கிங்

மார்ட்டின் லூதர் கிங், இளையவர் (Martin Luther King, Jr.; ஜனவரி 15, 1929 - ஏப்ரல் 4, 1968) ஐக்கிய அமெரிக்காவில் சமூக உரிமைக்காக போராடிய மாபெரும் ஆபிரிக்க-அமெரிக்கத் தலைவர்.

Baptist போதகராக இருந்த கிங் தனது இளமைக்காலத்திலேயே சமூக உரிமைவாதியாக இனங்காணப்பட்டார். அமெரிக்கக் கறுப்பின மக்களின் உரிமைகளுக்காக இவர் தீவிரமாகப் பாடுபட்டார். 1964 ஆம் ஆண்டில் இவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது. இவர் 1968 ஏப்ரல் 4 ஆம் நாள் டென்னசி மாநிலத்தில் மெம்ஃபிஸ் நகரில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஜனவரி மாதத்தின் மூன்றாவது திங்கட்கிழமை இவரின் நினைவாக அமெரிக்காவில் விடுமுறையாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

## சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 6:00 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
121 , ஹம்டன் லேன்,
வெள்ளவத்தை.

0772260165
0752151580

FB group : facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் : circle.thulaa.net

வலைப்பதிவு : circlelk.blogspot.com

## தேசம் - இனம் - தேசிய இனம்

முன்பக்கத் தொடர்ச்சி..

சில சந்தர்ப்பங்களில் அரசின் உருவாக்கம் தேசத்தின் உருவாக்கத்திற்கு முந்தியதென ஹொப்ஸ்பாம் தனது ஆய்வில் விளக்கியுள்ளார். உதாரணமாக, பிரான்ஸ் தேசத்தின் உருவாக்கத்தின் போக்கிற் பல தேசங்கள் தம் அடையாளத்தை இழந்து பிரான்ஸ் தேசத்தினுள் தம்மைக் கரைத்துக் கொண்டன. அவ்வாறே, தேசம் ஒன்றின் உருவாக்கம், அது தேச அரசாக அமைய முன்னர் நிகழ்ந்துமுள்ளது.

மேலைநாட்டு அறிஞர்கள் தேசியப் பிரச்சனையைப் பற்றி அலசுவதில் பாரிய விடுபாடாகத் தோன்றுவது ஏதெனின், தேசங்களே இல்லாத நிலைமைகளில் தேசங்களும் தேச-அரசுகளும் உருவானதில் கொலனியமும் நவ-கொலனியமும் ஆற்றிய பங்கைத் தவற விட்டமை ஆகும். கொலனியத்துக்குப் பிந்திய காலத்தில் மூன்றாமுலகாக அமைந்த பிரதேசங்களில் முதலாளியம் விருத்திபெற்ற விதங் காரணமாக, தேசிய உணர்வும் தேசியமும் ஐரோப்பாவில் விருத்தி பெற்ற விதத்தினின்று வேறுபட்ட முறையிலேயே அங்கு விருத்தி பெற்றன. தேசியம் பற்றிய கோட்பாடுகள், ஐரோப்பாவில் தேசிய உணர்வும் தேசியமும் பற்றிக் கணிசமானளவு ஆழ்ந்த ஆய்வையுடையன. கொலனியத்தின் கீழ்த் தேசியத்தின் விருத்தி கொலனி நாட்டில் முதலாளியத்தின் விருத்தியுடன் அதிக உறவுடையதல்ல. கொலனி நாடும் மக்களும் கொலனியஃ ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு உட்பட்டதன் விளைவுகட்குத் தேசியத்தின் விருத்தியுடன் உறவு இருந்தது.

தேச அரசு என்பது முதலாளியத்தின் நலன்கட்கு உதவுவதற்காக உருவானது. எனினும் முதலாளியத்தின் சமச்சீரற்ற வளர்ச்சியும் இயற்கை வளங்களையும் வணிகத்தையும் மனித வளங்களையும் தன் ஆளுமையின் கீழக் ; கொண்டிருப்பதற்காக அது கொலனியத்தைப் பாவித்தமையும், நேரடியாகவோ மறைமுகமாகவோ கொலனி ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் தேசங்களின் உருவாக்கத்திற்கும் விருத்திக்கும் பாதிப்புக்களைக் கொண்டிருந்தன. 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் முதலாளியம் எகாதிபத்தியமாக விருத்தி கண்டமை, ஆட்சியாளர்களிடையே அதிகாரத்துக்கும் மேலாதிக்கத்துக்குமான மோதல்களையும் மீறி, ஒப்பீட்டளவில் தம்மிடையே நல்லிணக்கத்துடன் வாழ்ந்துவந்த பல்வேறு இனக் குழுமங்கட்கும் சமூகங்கட்கும் இடையிலான உறவை மோசமாக்கியது.

தேச அரசுகளின் உருவாக்கம், ஐரோப்பா பரவலும் வாழ்ந்துவந்த ஜிப்ஸிகள் போன்ற நாடோடி மக்களை ஓரங்கட்டவும் அவர்களின் பாரம்பரியப் பிரதேசங்களை மறுக்கவும் வழி செய்தது. அத்துடன் ஐரோப்பாவின் துருவப் பிரதேசத்தின் சமி இனத்தோரின் பிரதேச உரிமையையும் கணிசமாகப் பலவீனப்படுத்தியது. தேச அரசுகளின் உருவாக்கம், குறிப்பாக எழுந்தமான முறையில் எல்லைகள் வகுக்கப்பட்ட ஆபிரிக்க நாடுகளில், சமூகங்களைப் பிரித்துள்ளதுடன் குலமரபுக் குழுமங்களினதும் இனக் குழுமங்களினதும் வாழ்வாதாரங்களையும் பாதித்துள்ளது.

தேசம் என்ற கருத்தாக்கம் முதலாளியத்தை ஒட்டி விருத்தியான அதே வேளை, நவீன முதலாளிய அரசின் விருத்தி, பலவாறான நடைமுறைகளினூடு, பல்வேறு இனக்குழுமத் தேசிய அடையாளங்கள் நசுக்கப்பட வகை செய்தது. கோனிஷ், வெல்ஷ், ஸ்கொட்டிஷ் இனக்குழுமஃதேசிய அடையாளங்களின் வீழ்ச்சிகளின் துணையுடனேயே பிரித்தானியத் தேசிய அடையாளம் எழுச்சி பெற்றது. ஐரிஷ் மக்களது கேலிக் மொழியின் இடத்தை ஆங்கிலம் வலுக்கட்டாயமாகப் பிடித்துக்கொண்ட பின்பும், ஐரிஷ் மக்கள் பிரித்தானியத் தேசிய அடையாளத்துக்குள் கரைவதைத் தவிர்த்துள்ளனர். பிரித்தானியரது கொடூரமான ஒடுக்கு முறையினதும் சுரண்டலினதும் காரணமான வெறுப்பிற்கும் அப்பால், மத வேறுபாடும், (கடலாற் பிரிக்கப்பட்டிருந்த வகையில்) புவியியலும் தத்தமக்குரிய பங்கை அதற்கு வழங்கின.

நகர் சார்ந்த ஒரு சிறுபான்மையினர் மட்டுமே சரளமாகப் பேசிய ஒரு மொழியான, 'அதிகாரபூர்வமான பிரெஞ்சு' தவிர்ந்து, பிரான்சில் பேசப்பட்ட அனைத்து மொழிகளையும் அமுக்குவது நெப்போலியனின் கீழ் வடிவமைக்கப்பட்ட பிரெஞ்சுத் தேசியத்துக்குத் தேவையாயிற்று. இனக்குழும, மொழி அடையாளங்களை நசுக்குவதில் ஸ்பானிய அரசு அவ்வளவு வெற்றிபெறவில்லை.

பல ஐரோப்பிய நாடுகளில், தேச அரசின் தோற்றமும் முதலாளியத்தின் விருத்தியும் சேர்ந்து, ஒவ்வொரு நாட்டிலும் ஒரு ஆதிக்க மொழியினது அல்லது பொது மொழியினது தோற்றத்திற்கு வழி செய்துள்ளன. சிறுபான்மை மொழிகளும் கணிசமான அளவிற்கு இனக்குழும அடையாளங்களும் ஓரங்கட்டப்பட்டதில் முதலாளியப் பொருளியற் செயற்பாடுகளின் விரிவாக்கம் தீர்மானமான பங்கு வகித்துள்ளபோதும், இனக்குழும, மொழி அடையாளங்களை நசுக்குவதில் அரசு ஒரு கருவியாக இயங்கியுள்ளது. அரச ஒடுக்குமுறையினதும் பின்தங்கிய முதலாளிய வளர்ச்சியினதும் பின்னணியில், ஐரோப்பாவின் சில பகுதிகளில், இனக்குழும, மொழி அடையாளங்கள் தேசிய அடையாளங்களாகவும் பிரிவினைவாத இயக்கங்களாகவும் உருப்பெற்றுள்ளன.

சுயநிர்ணய உரிமை என்பது பொதுவான தேவையைக் கொண்ட தேசங்களையும் தேசிய இனங்களையும் ஒன்றுபடுத்துவதற்கான பயன்வலிவுள்ள ஒரு வழிமுறையாகும். இன்றைய சூழலில், அப் பொதுத் தேவை, ஏகாதிபத்திய, மேலாதிக்கச் சுரண்டலையும் ஆதிக்கத்தையும் எதிர்த்து நிற்பதாகும். எனவே சுயநிர்ணய உரிமை என்பதை அதன் மெய்யான உட்பொருளில் நோக்கித், தனித்தனியே அரசுகளாக அமைவதற்கு வாய்ப்பற்ற தேசிய இனங்களுக்கும் தேசிய சிறுபான்மை யினருக்கும் பிற சமூக-இனக்குழுமப் பிரிவினருக்கும் பிரயோகிப்பது முக்கியமானது.

மற்றொரு அந்தத்தில், தொடர்ச்சியான பிரதேசமொன்றை மறுப்பதன் மூலமும் சனத்தொகையின் பல்வேறு பிரிவினரை வலிந்து தன்வசமாக்கியும் பண்பாட்டு, மொழி, மத உரிமைகளை மறுத்தும், பிற தேசிய, இனக்குழும அடையாளங்கள் அனைத்தையும் நசுக்க முற்படும் ஆதிக்கத்திலுள்ள அல்லது பெரும்பான்மை இனத்தின் பேரினவாதம் உள்ளது. இத்தகைய ஒடுக்குமுறை மக்களைப் பிளவு படுத்தும் அதே வேளை சுரண்டும் வர்க்கங்களினதும் அவற்றின் ஏகாதிபத்திய எசமானர்களதும் கைகளை வலுப்படுத்துகிறது.

தேசம் என்பது தனியான ஒரு இனத்தையோ இனக்குழுமத்தையோ கொண்டது என வரையறுத்து அதிலிருந்து தொடங்கி அந்தத் தேசத்திற்குப் பிரிவினையையோ பிரிந்துபோகும் உரிமையையோ கோருகிற ஆபத்தான ஒரு போக்கு உள்ளது. இந்த அணுகுமுறையின் தர்க்கரீதியான அந்தம் எதுவெனின் மூன்றாமுலக நாடுகளிற் பெரும்பாலானவற்றைப் பல தேச அரசுகளாகக் கூறுபோடுமாறு —சில வற்றை நூற்றுக்கணக்கான துண்டங்களாக்குமாறு— கோருவதாகும். இவ்வாறான கூறாக்கல் நிச்சயமாக ஒடுக்கப்பட்ட வெகுசனங்களின் நன்மைக்கானதல்ல.

சுயநிர்ணய உரிமை எனும் நெறி, முதன்முதலில் ரஷ்யப் புரட்சியின் தொடர்பில் லெனினால் முன்வைக்கப்பட்டது. அது, ஸார் ஆட்சியின் கீழ் ஒடுக்கப்பட்ட அனைத்துத் தேசங்களிடையிலும் சுயதெரிவின் அடிப்படையில் ஒற்றுமையைப் பேணி, அதன்மூலம் அவை சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றியம் ஒன்றினுட் சமமமான பங்காளிகளாகத் தொடரந்திருக்க வேண்டி, நன்கு சிந்தித்து வகுக்கப்பட்ட ஒரு மூலோபாயமாகும். தேசங்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்திய நோக்கம் ஏதெனின், பிரிந்துசெல்லும் உரிமையானது பிரிவினையை ஊக்குவிப்பதற்கு மாறாக, எவ்விதமான கட்டாயமுமின்றிச், சுயவிருப்பின் அடிப்படையில் ஒற்றுமையை இயலுமாக்கலாகும்.

### இலங்கையில் பகுத்தறிவு இயக்கம்
### (இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு)

* பகுத்தறிவு இயக்கம் பற்றிய அறிமுகம்

* ஏபிரகாம் கோவூர் பற்றிய அறிமுகம்

* இலங்கையில் பகுத்தறிவுவாதமும் பகுத்தறிவு இயக்கமும்

* இலங்கையில் பகுத்தறிவுக் கண்ணோட்டம் அருகிவருதலும் சமகால அரசியல் நிலவரங்களும்

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.

BY NC SA